ISSN (ONLINE): 3107-7862

# Guardianship and Property Management in Persons with Mental Illness: A Legal Overview

**A Practical Perspective on Limited Guardianship under the Mental Healthcare Act 2017 and the Rights of Persons with Disabilities Act 2016**

Dr. மகேஷ் ராஜகோபால் MBBS, MRC Psych.(UK), மனநல மருத்துவர், அறம் மருத்துவமனை, திருச்சி.

Tamil Psychiatry Journal, Vol-2, Issue-2, Apr-Jun 2026, Page 14-19

## பாதுகாவலர் மற்றும் சொத்து மேலாண்மை குறித்த ஒரு சிறிய கண்ணோட்டம்

முந்தைய காலத்தில் மனநோய் என்பது சமூகத்தில் அங்கீகரிப்படாத நோயாகவும் அல்லது சமூகத்தால் ஏற்றுக்கொள்ள முடியாத பிரச்சனையாகவும் இருந்து வந்துள்ளது. இதனால் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தகுந்த மனநல சிகிச்சை வழங்குவது என்பது மிகுந்த சவாலாகவே இருந்து வந்துள்ளது. இதற்கு பல காரணங்கள் சமுதாயத்தில் உலவி வருகின்றன. உதாரணமாக மனநோய் பற்றிய புரிதல் சமூகத்தில் இல்லாத காரணத்தினாலும், மனநோய் பற்றிய அவநம்பிக்கைகள் மக்களிடத்தில் அதிகமாக பரவி வருவதன் காரணமாகவும் ஒரு மனநோயாளிக்கு தக்க சிகிச்சை கிடைக்காமல் அவதிப்பட்டு வருகின்றனர். இதனால் சமுதாயத்தில் மனநோயாளிகள் அனைவரும் அங்கீகரிக்கப்படாதவர்களாக புறக்கணிக்கப்படுவது, அவர்களுடைய உரிமைகளை அவர்களுக்கு கிடைக்கப்பெறாமல் செய்வது, சமுதாயத்தில் தவறாக நடத்தப்படுவது, அவர்களுக்கு பேய், பிசாசு பிடித்திருப்பதாக தவறாக கருதி அவர்களை அடித்து துன்புறுத்துவது; இதுபோன்ற மனநோய் பற்றிய 'தவறான சித்தரித்தல்' இருப்பதன் காரணமாக, அவற்றை ஒழுங்குபடுத்தும் அடிப்படையில் மனநல பாதுகாப்புச் சட்டம் - 1984 உருவாக்கப்பட்டு, 1987-ல் இந்தியாவில் அமுலுக்கு வந்தது.

அதுமட்டுமின்றி, மனநோயாளிகளுக்கு தக்க சிகிச்சை வழங்கி, அவர்களுடைய தனிமனித உரிமையை பாதுகாப்பதற்காகவும் தான் இந்த மனநல பாதுகாப்புச் சட்டம் - 1987 - ஆரம்பகட்ட சட்டமாக உருவாக்கப்பட்டது. ஆனால், இந்த சட்டத்தில் மனித உரிமைகளுக்கு குறைவாக கவனிக்கப்படாததன் காரணமாகவும், நோயாளியின் விருப்பம் அதிகம் மதிக்கபடாததன் காரணமாகவும், மற்றும் சமூகத்தில் மீள சேர்க்கும் முயற்சி குறைவாக இருப்பதினாலும் இந்த சட்டம் புதுப்பிக்கப்பட்டு மனநல பாதுகாப்புச் சட்டம் - 2017 - ஆக நடைமுறைக்கு வந்தது. இந்த சட்டத்தில் ஒரு மனநோயாளியின் தனி உரிமையை பாதுக்கப்படுவதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அவருடைய சிகிச்சை பற்றிய முடிவுகளை சரியான முறையில் வழங்குவதற்காக ஒரு நியமிக்கப்பட்ட பிரதிநிதி (Nominative Representative) நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், அந்த நியமிக்கப்பட்ட பிரதிநிதி, அந்த மனநோயாளிக்கு சரியான மருத்துவம் பற்றிய முடிவுகளை தகுந்த முறையில் தேர்ந்தெடுத்து, மனநல சிகிச்சைகள் வழங்கப்பட வேண்டும் என இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது. ஆனால் மனநலத்தால் பாதிக்கப்பட்டவர்களின் சொத்துக்கள் மற்றும் செலவுகளை குடும்பத்தினர்கள் எவ்வாறு செலவழிக்கலாம் என்பது பற்றின விளக்கங்கள் எதுவும் இதில் இல்லை.

அதுமட்டுமின்றி, மனநோயாளியின் அசையும் மற்றும் அசைய சொத்துக்களை சார்ந்த முடிவுகளை எடுப்பதற்கு பாதுகாவலர் என்ற ஒன்றை அறிமுகம் செய்யப்பட்டு, சொத்துக்களை பராமரிப்பதிலும் அவர்களின் மருத்துவச் செலவுகளுக்காக அந்த சொத்துக்களைப் பயன்படுத்துவதிலும் அதிகாரம் கொடுக்கப்பட்டு அவற்றின் செலவுகளை மேற்பார்வை செய்வதற்கும் இந்தச் சட்டம் அதிகாரம் கொடுத்துள்ளது. பாதுகாவலருக்கு சொத்துக்களைப் பராமரிக்கும் மற்றும் பாதுகாக்கும் அதிகாரம் கொடுக்கப்படிருந்தாலும் இந்தச் சட்டத்தில் பல தெளிவற்ற சூழல்களும், குழப்பங்களும் இருந்து வருவது என்பது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, சொந்தமாகச் சொத்துக்கள் வைத்திருக்கும் நபர்களின் பராமரிப்புச் செலவுகளுக்கு அந்தச் சொத்துக்களைக் கையாள்வதில் நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன.

ISSN (ONLINE): 3107-7862

இதற்கு தீர்வாக, 2016-ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைச் சட்டத்தின் (Section 14) கீழ் 'வரையறுக்கப்பட்ட பாதுகாவலர்' (Limited Guardianship) முறையைத் தமிழக அரசு குறிப்பிடுகிறது. இதன் மூலம் மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் பாதுகாவலர், பாதிக்கப்பட்ட நபருடன் இணைந்து முடிவுகளை (முடிவு எடுக்கும் திறன் இருக்கும் பொழுது) மேற்கொள்ள வழிவகை செய்யப்படுகிறது.

**பாதுகாவலர் நிலைகள் (Types of Guardianship):**

மாற்றுத்திறனாளிகளின் நலனைப் பாதுகாக்க மூன்று முக்கிய நிலைகளில் நாம் பாதுகாவலர்களை நியமிக்க முடியும்:

1. **நியமிக்கப்பட்ட பிரதிநிதி (Nominated Representative - NR):**

மனநலம் பாதிக்கப்பட்ட அல்லது அறிவுசார் குறைபாடுடைய ஒரு நபர், தனது சார்பாக முடிவுகளை எடுக்க ஒருவரை நியமிக்கலாம். இதற்கு ஒரு அரசு மனநல மருத்துவரின் சான்றிதழ் போதுமானது.

2. **வரையறுக்கப்பட்ட பாதுகாவலர் (Limited Guardianship):**

குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட தேவைக்காக (உதாரணமாக சொத்து விற்பனை) மட்டும் மாவட்ட ஆட்சியர் மூலம் இந்த உரிமையைப் பெறலாம். இதற்கு மருத்துவ வாரியத்தின் சான்றிதழ் அவசியமாகும்.

3. **முழுமையான சட்டப் பாதுகாவலர் (Plenary Guardianship):**

இது ஒரு நபரின் வாழ்நாள் முழுமைக்கும் மற்றும் அவரின் அனைத்து முடிவுகளுக்கும் பொறுப்பேற்கும் முழுமையான அதிகாரமாகும்.

**வரையறுக்கப்பட்ட பாதுகாவலரின் பொறுப்புகளும் கடமைகளும்:**

- ஒரு மன நோயாளிக்கு முடிவு எடுக்கும் திறன் இருக்கும் போது, அவருடைய அசையும் மற்றும் அசைய சொத்து பற்றிய முடிவுகளை, அவரின் மீது அக்கறை உள்ள ஒருவருடன் இணைந்து சரியான முடிவுகளை எடுப்பதற்கு நியமிக்கப்படுபவர் தான் வரையறுக்கப்பட்ட பாதுகாவலர் (LIMITED GUARDIANSHIP) என சட்டத்தில் கூறப்படுகிறது.
- இந்த வரையறுக்கப்பட்ட காப்பாளர்கள் மனநோயாளியின் மருத்துவ முடிவுகள் எடுப்பதற்கும், பண மேலாண்மை குறித்த முடிவுகள் எடுப்பதற்கும், வசிப்பிடம், கல்வி மற்றும் தொழில் சார்ந்த முடிவுகள் எடுப்பதற்கும் இந்த வரையறுக்கப்பட்ட காப்பாளருக்கு இந்த சட்டத்தில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த முடிவுகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தேவையான அளவு உதவி மட்டுமே வழங்கும் அதிகாரத்தை இந்த சட்டம் வலியுறுத்துகிறது.
- இந்த வரையறுக்கப்பட்ட காப்பாளர்கள், மனநலம் பாதிக்கப்பட்டவர்களுடைய முடிவுகளை தகர்த்துவிட்டு இந்த காப்பாளர்கள் முடிவு எடுப்பதில்லை. இது ஒரு கூட்டாக சேர்ந்து முடிவு எடுக்கும் முறையாகும்.
- மேலும் ஒரு மனநோயாளி ஓய்வூதியம் பெறுபவர் என்ற நிலையில், அந்த நோயாளியால் அந்த பணத்தை சரியான வழியில் நிர்வகிக்க முடியாது என்றால், இந்த வரையறுக்கப்பட்ட பாதுகாவலர் அந்த மனநோயாளியின் ஓய்வூதியத்தை மன நோயாளியின் மருத்துவ செலவுக்கும், நோயாளியின் தனிப்பட்ட செலவுகளுக்கும் நிர்வாகம் செய்யும் அதிகாரத்தை பெற்றிருப்பாரே தவிர அந்த பாதுகாவலரின் தனிப்பட்ட தேவைகளுக்கு செலவு செய்யும் அதிகாரம் கிடையாது.

**இந்த வரையறுக்கப்பட்ட காப்பாளராக யாரெல்லாம் விண்ணப்பிக்கலாம்?**

- குடும்ப உறுப்பினர் (அப்பா, அம்மா, மகன், மகள்)
- நெருங்கிய உறவினர்
- நம்பகமான நபர் (நண்பர்கள்)
- சில நேரங்களில் NGO / நிறுவனம்.

**வரையறுக்கப்பட்ட காப்பாளர் ஆக வேண்டும் என்றால் எங்கு எவ்வாறு விண்ணப்பிப்பது?**

- வரையறுக்கப்பட்ட காப்பாளர் (Limited Guardianship) முதலில் சட்டப் பூர்வமாக விண்ணப்பத்தை மாவட்ட முதன்மை நீதிமன்றத்திலோ அல்லது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலோ அல்லது

மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலகத்திலோ விண்ணப்பிக்கவேண்டும்.

- ✧ இந்த வரையறுக்கப்பட்ட காப்பாளராக வேண்டும் என்றால் அதற்கான முக்கிய ஆவணங்களான - மாற்றுத்திறனாளி சான்றிதழ் அல்லது மருத்துவ சான்றிதழ், Psychiatrist Reports, ID Proof, முகவரிக்கான ஆதார அட்டை போன்றவற்றை மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- ✧ அதன் பின்னர் அந்த மனநோயாளிக்கு Capacity Assessment என்று சொல்லக்கூடிய முடிவு எடுக்கும் திறன் எவ்வாறு இருக்கிறது என்ற பரிசோதனையை, நீதிமன்றம் மூலம் ஒரு மனநல மருத்துவரை நியமிக்கப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும். அந்த பரிசோதனையின் முடிவில் தான், எந்த குறிப்பிட்ட துறையில் (Finance, Health) அந்த விண்ணப்பிக்கப்பட்ட பாதுகாவலருக்கு அதிகாரம் வழங்கப்படும் என தீர்மானிக்கப்படும்.
- ✧ ஒரு சில நேரங்களில் அந்த அதிகாரம் கிடைப்பதற்கு நேரம் எடுக்கலாம்.
- ✧ அந்த வரையறுக்கப்பட்ட காப்பாளருக்கு நீதிமன்றம் மூலம் அதிகாரம் வழங்கப்பட பின், அந்த அதிகாரத்தை சரியான முறையிலும், செலவு செய்யப்பட்ட பண விவரங்களை பதிவு செய்து கொண்டு அவற்றைத் தேவையான சமயத்தில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**முழுமையான பாதுகாவலர் (Plenary/Complete Guardianship):**

- ✧ இந்த முழுமையான பாதுகாவலர் (Complete Guardianship) என்பவர், மறதி நோய், தீவிர மனநல பிரச்சனை என்று கூறப்படுகிற மனச்சிதைவு நோய், தீவிர அறிவுத்திறன் குறைபாடு (Profound Intellectual Disability) போன்ற பிரச்சனை இருப்பவர்களுக்கு, அவர்களுடைய அசையும் மற்றும் அசையா சொத்து பற்றிய முழுமையான முடிவுகளை, நோயாளிகளின் சம்மந்தமின்றி, எடுப்பதற்கு நியமிக்கப்படுபவர் தான் இந்த முழுமையான பாதுகாவலர் என்று கூறப்படுகிறது.
- ✧ இந்த முழுமையான பாதுகாவலர் என்பவர் Guardians & Wards Act -1890 என்ற சட்டத்தின் கீழ் நியமிக்கப்படுபவர். இந்தச் சட்டம் பழைய சட்டங்களில் இருந்து வந்த ஒரு கருத்து ஆகும். இவை பெரும்பாலும் மனநோயாளிகளுக்கோ அல்லது மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டும் இந்தச் சட்டம் வரையறுக்கப்பட்டதல்ல. இந்த சட்டம் பொதுவாக 18 வயதினருக்கு கீழ் உள்ள தரப்பினருக்கு, பாதுகாவலர்களை நியமிக்கும் மற்றும் அவர்களின் உரிமைகள், கடமைகள், பொறுப்புகளை நிர்வகிக்கும் சட்டமாகும். இது 21 மார்ச் 1890 அன்று நிறைவேற்றப்பட்டது மற்றும் இந்தியா முழுவதும் அமலில் உள்ளது. இந்தச் சட்டம் சிறார்களின் நலனுக்காக நீதிமன்றங்களின் கட்டுப்பாட்டில் பாதுகாவலர்களை நியமிக்கும் விதிமுறைகளை ஒருங்கிணைத்தது.
- ✧ ஆனால் இந்த சட்டம் மேற்குறிப்பிட்ட மனநோயாளிகளுக்கும் பொருந்தும் சட்டமாக அமைகிறது. மனநோயாளிகள் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பற்றிய முடிவுகளை முழுமையாக எடுப்பதற்கு இந்த பாதுகாவலருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.
- ✧ இந்த சட்டம் இயற்கை பாதுகாவர்களை உடனடியாக ஏற்றுக்கொள்கிறது. இதில் முதற்படியாக மனநோயாளியின் தாயாக இருக்கும் பட்சத்தில் நீதிமன்றம், அந்த பாதுகாவலருக்கு அதிகாரம் வழங்குவதில் எவ்வித கால வரையறையை வழங்குவதில் தயக்கம் காட்டுவதில்லை. அடுத்தபடியாக தந்தை ஒரு முழுமையான பாதுகாவலராக அதிகாரம் வழங்குவதற்கு இந்த சட்டம் அனுமதிக்கிறது. இதற்கு அடுத்தபடியாக சகோதரர்கள், இரத்த சொந்தங்கள் மற்றும் மனநோயாளியின் மீது அக்கறையுள்ள நபர்களை - பாதுகாவலராக நியமிப்பதற்கு இந்த சட்டம் அதிகாரம் வழங்குகிறது.
- ✧ ஆனால் மனநோயாளிகளுக்கு இயற்கை பாதுகாவலராக (தாய், தந்தை) இல்லாத பட்சத்தில், ஒரு மனநோயளிக்கு பாதுகாவராக ஆகும் பொருட்டில், நீதிமன்றம் அதிக காலவரையறையை எடுத்துக் கொள்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ISSN (ONLINE): 3107-7862

**முழுமையான பாதுகாவலராக ஆவதற்கு எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?**

முழுமையான பாதுகாவலராக ஆக வேண்டும் என்றால் அதற்கு நிறைய விதி முறைகள் சட்டத்தில் கூறப்படுகின்றன. அவையாவன,

- முதலில் மனநோயாளிக்கு மாற்றுத்திறனாளி சான்றிதழ் இருப்பது மிக அவசியமானது. அதை பொறுத்து தான் அந்த பாதுகாவலராக ஆக நினைக்கும் நபர் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க இயலும். மேலும், ஓய்வூதியம் தொடர்பான விஷயங்களுக்கும் இந்தச் சான்றிதழ் முக்கியமானது என்பது குறிப்பிடதக்கது.

- முதலில் அதற்கு முதன்மை நீதிமன்றத்தில் (மனநோயாளியின் இருப்பிடம் மற்றும் அவருடைய சொத்துக்கள் இருக்குமிடம்) முழு பாதுகாவலாராக ஆக வேண்டும் என விண்ணப்பிக்க வேண்டும். இதற்கு முதலில் அந்த பாதுகாவலர் வரையறுக்கப்பட்ட காப்பாளராக இருந்து தான் முழுமையான காப்பாளராக மாறுவதற்கு நீதிமன்றத்தில் மனு கோர வேண்டும்.

- அந்த மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் போய் இந்த சட்டத்தின்படி முதலில் காப்பாளர் (Guardian) உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். காப்பாளர் உரிமையைப் பெற்ற பிறகு, அவருடைய சொத்துக்கள் (Assets) மற்றும் பொறுப்புகள் (Liabilities) - அதாவது நாம் அவருக்காக கடனாகப் பெற்று செலவு செய்திருப்பதினால் ஏற்பட்டுள்ள கடன், சொத்து மற்றும் வருமானம் ஆகிய அனைத்தையும் காப்பாளர் உரிமை பெற்ற பிறகு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அவருடைய நலனுக்காக இந்தச் சொத்துக்களை விற்கப் போகிறோம் அல்லது இந்த முதலீடுகளை எடுக்க போகிறோம் என்ற மனுவை விண்ணப்பித்த பிறகு, அந்த நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களையும், வேண்டுகோள் சரியாக தான் உள்ளது என்பதை ஆராய்ந்து பார்த்த பின், அந்த நீதிமன்றம் அந்த மனுவிற்கு உத்தரவிடும்.

- உதாரணத்திற்கு, ஒரு வீடு இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த வீட்டை விற்றுத்தான் அவருக்குப் பணம் கட்ட முடியும் என்று அந்த நோயாளியின் மீது அக்கறையுள்ள ஒரு நபர் அல்லது நண்பர்கள் யாராவது கேட்டால், நீதிமன்றம் அதனை ஆராய்ந்து பார்க்கும். அல்லது நீதிமன்றமே அந்தச் சொத்தை விற்பனை செய்து, சம்பந்தப்பட்ட நோயாளியின் பெயரிலேயே முதலீடு செய்து, அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு செலவு செய்யச் சொல்லும். உதாரணமாக, ஒரு சொத்து 15 லட்சம் ரூபாய்க்கு விற்கப்படுகிறது, செலவு 2 லட்சம் ரூபாய் தான் என்றால், மீதமுள்ள 13 லட்சம் ரூபாயை நோயாளியின் பெயரில் வங்கியில் போட்டு அதனை நீதிமன்றத்தில் காட்ட வேண்டும். அந்த வட்டி வருமானம், பழைய சொத்துக்கள், புதிய சொத்துக்கள் என அனைத்தையும் ஆறு மாதத்திற்கு ஒருமுறை மாவட்ட நீதிமன்றத்தில் அறிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டும். 'இவருக்காக இவ்வளவு செலவு செய்திருக்கிறோம், இவ்வளவு கடன் வாங்கியிருக்கிறோம், அல்லது இவ்வளவு வருமானம் அவர் பெயரில் வந்திருக்கிறது' என்பது போன்ற விவரங்களுடன் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் பட்டியலை அளிக்க வேண்டும். ஒருவேளை ஆறு மாதத்தில் கையில் இருந்த பணம் செலவாகிவிட்டது அல்லது கடன் வாங்கிச் செலவு செய்திருக்கிறீர்கள் என்றால், மீண்டும் 'இந்த அசையும் அல்லது அசையாச் சொத்தை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம்' என்று அனுமதி கோரலாம்.

- இறுதியில், உச்ச நீதிமன்றம் தான் மனு விண்ணப்பித்ததை சரி பார்த்து முழுமையான பாதுகாவலாராக நியமிப்பதற்கு உத்தரவு வழங்க வேண்டும்.

- நீதிமன்றம் அனுமதி அளிக்கும் பட்சத்தில் மட்டுமே, காப்பாளராக நியமிக்கப்பட்டவர் அந்தப் பணத்தை எடுத்துச் செலவு செய்ய முடியும். அவ்வாறு எடுக்கப்படும் ஒவ்வொரு ரூபாய்க்கும் முறையான ரசீதுகள் மற்றும் கணக்குகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியது சட்டப்பூர்வ கடமையாகும். இத்தகைய விழிப்புணர்வு மற்றும் முறையான ஆவணப்படுத்துதல் மட்டுமே மனநோயாளிகளின்/

மாற்றுத்திறனாளிகளின் எதிர்காலத்தை எவ்வித சிக்கலுமின்றிப் பாதுகாக்கும்.

**மனநலம் சார்ந்த சட்ட இடைவெளிகள் :**

தற்போதைய மனநல சுகாதாரச் சட்டங்களில் (Mental Health Act-2017) பல அடிப்படைத் தீர்வுகள் விடுபட்டுள்ளதாக நீதிமன்றங்களே பலமுறை சுட்டிக்காட்டியுள்ளன. கடந்த பத்து ஆண்டுகளில் டெமென்ஷியா போன்ற மறதி நோய்கள் பரவலாக அறியப்பட்டாலும், இவர்களுக்குச் சட்டப்பூர்வமாக ஒரு பாதுகாவலரை நியமிப்பதற்கான வழிமுறைகள் இன்னும் மத்திய அரசால் முழுமையாகச் சீரமைக்கப்படவில்லை. இதனால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் பெரும் மன உளைச்சலுக்கும், கால தாமதத்திற்கும் உள்ளாகின்றனர்.

**பாதுகாவலர் நியமனத்தில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள்:**

சட்டரீதியான பாதுகாவலர் உரிமை பெறுவதற்குப் பலரும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அல்லது தேசிய அறக்கட்டளைகளை (National Trust) அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஆனால், நடைமுறையில் இதற்கான சரியான வழிமுறை என்பது உள்ளூர் மாவட்ட நீதி மன்றங்களை அணுகி, மருத்துவச் சான்றிதழ்களின் அடிப்படையில் பாதுகாவலர் உரிமையைக் கோருவதே ஆகும். இதனைச் சரியாக புரிந்து கொள்ளாத காரணத்தால், பல வழக்கறிஞர்கள் மற்றும் பொதுமக்கள் தவறான வழிகாட்டுதல்களால் பல ஆண்டுகள் அலைக்கழிக்கப்படுகின்றனர்.

சட்ட ரீதியான நடைமுறைகளைத் தாண்டி, நோயாளிகளின் ஒத்துழைப்பு இன்மை ஒரு பெரிய சவாலாக உள்ளது. நிதி விவகாரங்களில் கையெழுத்திட மறுப்பது, உறவினர்கள் மீது சந்தேகம் கொள்வது போன்ற குணாதிசயங்கள் பணப் பரிமாற்றங்களை மேலும் சிக்கலாக்குகின்றன.

**மனநலம் மற்றும் சொத்து மேலாண்மை குறித்த சட்டப்பூர்வ வழிகாட்டுதல்கள்:**

ஒரு நோயாளி அல்லது மனநலம் குன்றியவரின் பெயரில் உள்ள வங்கிக் கணக்குகள் அல்லது சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கு நீதிமன்றத்தின் தலையீடு மிக அவசியமானது. குறிப்பாக, நோயாளியின் பெயரில் உள்ள பணத்தை அவரது சிகிச்சைக்காகப் பயன்படுத்த வேண்டுமானால், அந்தத் தொகையை எடுத்து நோயாளியின் பெயரிலேயே மீண்டும் டெபாசிட் செய்து, அதற்கான நகலை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியது அவசியமான நடைமுறையாகும்.

மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவரின் ஓய்வூதியத்தை (Pension) கையாளுவதற்கு ஒரு பாதுகாவலரை (Guardian) நியமிக்க சட்டம் வழிவகை செய்கிறது. கணவருக்கு மனநலம் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில், அவரது ஓய்வூதியத்தை மனைவி பெறுவதற்கு உரிய சட்ட அங்கீகாரம் போதுமானதாக இருக்கும். இது போன்ற சூழல்களில், 'National Trust Act' போன்ற சட்டங்கள் மாவட்ட ஆட்சியர் மூலம் தீர்வுகளை வழங்கினாலும், உயர் நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட நீதிமன்றங்களின் நேரடி உத்தரவுகள் சில நேரங்களில் மாறுபடலாம் என்பதை அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர்களின் ஆலோசனைகள் உணர்த்துகின்றன.

வழக்கறிஞர்கள் மூலம் உயர் நீதிமன்றத்தை அணுகும்போது அதற்கான செலவுகள் அதிகமாக இருக்கலாம். இருப்பினும், போதிய வசதி இல்லாதவர்கள் மாவட்ட இலவச சட்ட உதவி மையத்தை (District Legal Services Authority) அணுகி சட்ட ஆலோசனைகளையும் உதவிகளையும் பெறலாம். சட்டப்படி, மனநலம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு உடனடி பாதுகாவலராக மாவட்ட ஆட்சியரே செயல்படுகிறார். ஒரு நபர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து ஆட்சியருக்கு கடிதம் அளிக்கப்பட்டால், 15 நாட்களுக்குள் அவர் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக, சொத்துக்கள் ஏதுமில்லாத நிலையில் இருப்பவர்களுக்கு, அரசின் நலத் திட்டங்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் போன்ற உதவிகளைப் பெற மாவட்ட ஆட்சியரிடம் 'வரம்புக்கு உட்பட்ட பாதுகாவலர்' (Limited Guardianship) சான்றிதழ் பெறுவது எளிமையான மற்றும் செலவற்ற வழியாகும். இதன் மூலம் நீதி மன்றங்களுக்கு அலைவதைத் தவிர்க்கலாம்.

மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலனைப் பாதுகாப்பதில் பாதுகாவலர் நியமனம் (Guardianship) மிக முக்கியமான சட்ட நடைமுறையாகும். 1890-ஆம் ஆண்டின் பாதுகாவலர்கள் மற்றும் வார்டுகள் சட்டத்தின்படி (Guardians and Wards Act, 1890), பாதிக்கப்பட்ட நபரின் சொத்துக்களைப் பராமரிக்கவும், அவர்களின் நலனை உறுதி செய்யவும் முறையான

பாதுகாவலரை நீதிமன்றம் மூலம் நியமிக்க முடியும். சொத்துக்களை விற்பனை செய்வதற்குக் கூட நீதிமன்றத்தின் அனுமதி கட்டாயமாகும். மாவட்ட ஆட்சியர்கள், மருத்துவர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரிடமும் இது குறித்த விழிப்புணர்வு அவசியமானது.

**முடிவுரை:**

மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தையும், அவர்களின் மனித உரிமைகளையும் பாதுகாப்பதில் பாதுகாவலர் நியமனமும் சொத்து மேலாண்மையும் மிக முக்கியமான சட்ட மற்றும் சமூக அம்சங்களாகும். மனநல பாதுகாப்புச் சட்டம் – 2017 மற்றும் மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம் – 2016 ஆகியவை மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் நலனை மையமாகக் கொண்டு பல உரிமைகளையும் பாதுகாப்பு நடைமுறைகளையும் வழங்குகின்றன. குறிப்பாக, வரையறுக்கப்பட்ட பாதுகாவலர் (Limited Guardianship) மற்றும் முழுமையான பாதுகாவலர் (Plenary Guardianship) போன்ற நடைமுறைகள் மூலம் பாதிக்கப்பட்ட நபர்களின் மருத்துவம், பொருளாதாரம் மற்றும் சொத்து சார்ந்த தேவைகளை சட்டரீதியாக பாதுகாக்க முடிகிறது.

அதே நேரத்தில், நடைமுறையில் சட்ட விழிப்புணர்வு குறைவு, நீண்டகால நீதிமன்ற செயல்முறைகள், மற்றும் குடும்பங்களின் பொருளாதார சுமைகள் போன்ற பல சவால்கள் தொடர்ந்து காணப்படுகின்றன. எனவே, மாவட்ட நிர்வாகம், நீதித்துறை, மருத்துவர்கள், சமூகப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரிடையே இதுகுறித்த தெளிவான விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாகிறது. மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளை மதித்து, அவர்களின் சொத்துக்கள் மற்றும் வாழ்வாதாரம் பாதுகாக்கும் மனிதநேயமான மற்றும் எளிமையான சட்ட நடைமுறைகள் உருவாக்கப்படும்போது மட்டுமே அவர்களின் எதிர்காலம் பாதுகாப்பாக அமையும்.

**References:**


1. Mental Healthcare Act, 2017. (2017). *The Mental Healthcare Act, 2017*. Government of India. Ministry of Law and Justice.
2. Rights of Persons with Disabilities Act, 2016. (2016). *The Rights of Persons with Disabilities Act, 2016*. Government of India.
3. Guardians and Wards Act, 1890. (1890). *The Guardians and Wards Act, 1890*. Government of India.
4. National Trust. (1999). *The National Trust for Welfare of Persons with Autism, Cerebral Palsy, Mental Retardation and Multiple Disabilities Act, 1999*. Government of India.
5. World Health Organization. (2022). *World Mental Health Report: Transforming Mental Health for All*. Geneva: WHO.
6. Kaplan and Sadock's Synopsis of Psychiatry. (2021). Wolters Kluwer Publications.
7. Oxford Textbook of Psychiatry. Gelder, M., Andreasen, N., & Lopez-Ibor, J. (2020). Oxford University Press.
8. National Institute of Mental Health and Neurosciences. (2021). *Mental Health and Legal Capacity Guidelines*. Bengaluru, India.
9. United Nations. (2006). *Convention on the Rights of Persons with Disabilities (CRPD)*. New York: United Nations.
10. Mental Health Care and Human Rights. Sharma, K. (2019). New Delhi: Sage Publications.